சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள்.17.03.2025

OS.No.46/2019

DW2 : ராமராஜன் (வயது 36 ) த/பெ. நாகேஸ்வரன்

( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் 9 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழில் எழுத படிக்க தெரியுமா என்றால் கொஞ்சமாக எழுத படிக்க தெரியும். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள ராமராஜன் என்ற 1 வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள 2 வது நபர் நாகேஸ்வரன் கையெழுத்து எனது தகப்பனாருடையது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் 2 வது சாட்சி மணிவேல் என்பவர் எனக்கு சகோதர முறையா என்றால் எனது சொந்தகாரர். வாதி ரவிசந்திரனை எனக்கு தெரியும். வா.சா.ஆ..3 ல் நான் எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் இலால்குடி, பாத்திரகடையில் வைத்து கையொப்பம் செய்தேன். வா.சா.ஆ.3 ல் கையொப்பம் செய்யும்போது பத்திர அலுவலகம் சென்றேனா என்றால் இல்லை, இங்கு தான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணம் இலால்குடி சார்பதிவு அலுவலகத்தில் பதிவாகியுள்ளதா என்றால் ஆமாம். தாவா சொத்து எனது அப்பாவிற்கு சொந்தமான சொத்தா என்றால் ஆமாம். என்னிடம் காட்டடப்படும் வா.சா.ஆ.1,2 மூல பத்திரங்களை எனது தகப்பனார் தான் வாதிக்கு கொடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எனது நிருபண வாக்குமூலத்தில் 9 வது பாராவில் எனது வீட்டிலிருந்த அசல் பத்திரங்களை கொடுத்து எனது தகப்பனார் கடன் கேட்டார் என்று கூறியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. 2016 ஆம் வருடம் வா.சா.ஆ.3

ஆவணம் ஏற்பட்ட காலத்தில் தாவா சொத்தின் சந்தை மதிப்பை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி தெரியாது. 25.07.2016 அன்று தாவா சொத்தை எனது அப்பா கிரயம் செய்வதாக பேசி, அன்றைய தினம் ரூ.1 லட்சம் முன் தொகை வாங்கியுள்ளார் என்றும் பாக்கி ரூ.50,000/- ஐ ஒரு வருட காலத்தில் பெற்றுக்கொண்டு வாதிக்கு ஆதரவாக கிரய பத்திரம் எழுதி கொடுக்க ஒப்புக்கொண்டு வா.சா.ஆ.3 கிரய உடன்படிக்கை ஆவணத்தை எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. பாக்கி கிரய தொகை ரூ.50,000/-ஐ பெற்றுக்கொண்டு வாதிக்கு ஆதரவாக கிரய பத்திரம் எழுதி கொடுக்காததால் வாதி இந்த வழக்கை பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் வீட்டு உபயோக பொருள் வாங்குவதற்காக பணத்தை கொடுக்காததால் ஆவணத்தில் கையொப்பம் கேட்டார்கள்,அதன் பேரில் கையொப்பம் செய்து கொடுத்தோம். வா.சா.ஆ.3 ஆவணத்தை எனது தகப்பனார் எழுதி கொடுத்து, அதனை நானும் மணிவேலும் எனது தகப்பனாரும் சேர்ந்து பதிவு அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.பத்திர எழுத்தர் ராஜேந்திரன் என்பவரை எனக்கு தெரியாது. எனது அப்பா இந்த வழக்கில் பிரதிவாதி என்பதாலும், சாட்சி மணிவேல் எனது உறவுக்காரர் என்பதாலும் எனது தகப்பனாருக்கு ஆதரவாக, வாதிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் எனது சகோதரியின் திருமணத்திற்காக வீட்டு உபயோக பொருட்கள் வாங்கிய வகையில் பெற்ற கடனை வாதிக்கு திருப்பி செலுத்தி விட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் நான் கூறுவது போல் கடன் வாங்கி அதனை திருப்பி செலுத்தியிருந்தால் அதற்கான ஆவணத்தை மற்றும் ஆதாரத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றும் அவ்வாறு கடன் வாங்கவில்லை என்பதால் அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதியை ஏமாற்றும் நோக்கத்தில் திட்டமிட்டு நானும் எனது தகப்பனாரும் பொய்யாக சாட்சியம்

அளிக்கிறோம் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வாதிக்கு வா.சா.ஆ.3ன் படி கிரய பத்திரம் எழுதி கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**<u>ம.வி</u>** - இல்லை.

/ signed /
ராமராஜன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/- Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி